முருகப்பெருமான் துணை

**மகான் வரரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**05.11.2021**, வெள்ளிக்கிழமை

1. பிரம்ம சூட்சும ஞானியே
பேரருள் காட்டும் தவசியே
வரம்பல தந்து மக்களை
வழிநடத்த வந்த வள்ளலே
2. வள்ளலே ஆறுமுக அரங்கனே
வையகத்தில் உன்பெருமை கூறி
வல்லமைபட பிலவ துலைதிங்கள்
வரமென மூவாறோர்திகதி புகர் வாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 19ம் நாள், 05.11.2021 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் வரரிஷி யானும்
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
சோரமிலா ஞானயுகம் அமைய
சுருதிபடி அரங்கஞானி கேட்க உரைப்பேன்
4. உரைக்கவே ஓங்கார ஞானம்
உலகமெங்கும் சக்தியாக பரவ
குறைவின்றி அரங்க ஞானி
குருவாக மக்களுக்கு தயவை
5. தயவை பிரதானம் ஆக்கி
தரணியில் அருளி வர
தயவை தரும் அன்னதான
தரும வழிகளை மக்கள் ஏற்று
6. ஏற்றுமே தொடர்ந்து செய்து
ஏழ்மைதனை உலகெங்கும் விரட்டி
மாற்றம் தரும் அரங்கன் வழிகளை
மனமுவந்து தொண்டாகச் செய்ய
7. செய்யவே வினைகள் இல்லா
சிறப்பான வாழ்வாக மாறி
அய்யமிலா அழிவிலா வண்ணம்
அகிலமெங்கும் பாதுகாப்பு காண்கும்
8. காண்கவே இந்தவிதம் உலகில்
கந்த வேலன் சக்தியான
உண்மை ஆன்மீக ஞானவழி
உயர்வாய் ஏற்று மக்களிடை

9. மக்களிடை மகாசக்தியாகப் பரவ
மண்ணுலகம் மாண்பை பெறும்
தேக்கமின்றி வளர்ச்சி காணும்
தெய்வ நெறியாக வளர்ந்து

10. வளர்ந்து கலியுகம் தானும்
வளமும் வல்லமையும் காணும்
தளர்விலா ஞானவான்கள் கொண்ட
தலைமை பெருகி இனிதே

11. இனிதே ஞானிகள் ஆளுமைதனை
இயக்கும் ஞானயுகமாக மாறும்
கனிவேலன் அருளால் மாற்றம்
கலியுகம் தன்னில் காணக் கூடும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—